MAY 2022 **U/ID 33225/UCT6A**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும்
30 சொற்களில் விடை எழுதுக.

1. ஔவைக்கு நெல்லிக்கனிகொடுத்த வள்ளல் யார்?

2. வேள்பாரி எனும் பெயருக்கான காரணத்தை எழுதுக.

3. மகள் மறுத்தல் துறையின் பொருள் யாது?

4. பதிற்றுப்பத்தில் இரண்டாம் பத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

5. பதிற்றுப்பத்தில் மூன்றாம் பத்தின் ஆசிரியர் யார்?

6. 'கயிறு குறுமுகவை' எனும் பதிற்றுப்பத்துப் பாடலின் பெயர்க்காரணத்தை எழுதுக.

7. திருமுருகாற்றுப்படையின் பாட்டுரைத் தலைவன் யார்?

8. சிறுபாணாற்றுப் படையின் ஆசிரியர் யார்?

9. மதுரைக்காஞ்சி எத்தனை அடிகளைக் கொண்ட நூல்?

10. மதுரைக்காஞ்சியின் பாட்டுடைத் தலைவன் யார்?

11. கூதிர்காலத்திற்குரிய மாதங்களை எழுதுக.

12. பாசறையின் இருவகைகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும்
200 சொற்களில் விடை எழுதுக.

13. பொருட்டெழினியை ஔவையார் போற்றும் பாங்கினை விளக்குக.

14. பாரியின் நாடும் குன்றும் பெருவதற்கு கபிலர் கூறும் வழிகளை விளக்குக.

15. 'துயிலின் பாயல்' பாடலின் செய்திகளைப் பதிற்றுப்பத்து வழி விளக்குக.

16. பதிற்றுப்பத்தில் 'தலைதந்தகாஞ்சி' பாடல்பொருளை எழுதுக.

17. முருகனின் திருமேனிச் சிறப்பை விளக்குக.

18. சிறுபாணாற்றுப்படை வழி இயற்கைக் காட்சியைப் புலப்படுத்துக.

19. வியல்நாள்மின் நெறி ஒழுக - என மதுரைக்காஞ்சி கூறும் நிகழ்வை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும்
500 சொற்களில் விடை எழுதுக.

20. அதியமானின் வீரத்தை புறநானூறு வழி புலப்படுத்துக.

21. பதிற்றுப்பத்து வெளிப்படுத்தும் கொடைமடம் படைமடம் குறித்து விவரிக்க.

22. திருமுருகாற்றுப் படையின் ஆன்மீகக் கருத்துகளைப் புலப்படுத்துக.

23. மதுரைக்காஞ்சி உரைக்கும் மழைக்கலக் காட்சியை விவரிக்க.

24. நெடுநல்வாடைச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

———————